S

Reg. No.: 384

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## வகுப்பு-8

காலம் : 2.30 மணி — தமிழ் — மதிப்பெண்கள்:100

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .........
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ..........
   அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு
3. பள்ளிக்குச் சென்று கல்வி ............ சிறப்பு.
   அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்
4. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ........
   அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
   இ) உவமை அணி ஈ) உருவக அணி
5. உடல்நலம் என்பது .......... இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி
6. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ..........
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
7. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......
   அ) கனகச்+சுனை ஆ) கனக+சுனை இ) கனகம்+சுனை ஈ) கனம்+சுனை
8. 'செம்மரம்' என்னும் சொல் ..........த்தொகை.
   அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை
9. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ............
   அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி
10. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ...........
    அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை

நிரப்புக 5 x 1 = 5

11. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ..........
12. புற உலக ஆராய்ச்சிக்கு .............. கொழுகொம்பு போன்றது.
13. பின்னலாடை நகரமாக ......... விளங்குகிறது.
14. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........
15. பொறை என்பதன் பொருள் .........

பொருத்துக: 5 x 1 = 5

16. பெயரெச்சத் தொடர் - இயல்புப் புணர்ச்சி
17. வினையெச்சத் தொடர் - எழுதியபாடல்
18. மணிமுடி - வினையெச்சம்
19. எடுத்தனன் உண்டான் - பாடி முடித்தான்
20. நடந்து - முற்றெச்சம்

### பகுதி - ஆ

எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளிக்க. 8 x 2 = 16

21. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
22. ஓலைச்சுவடிகளில் நேர்க்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?
23. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?
24. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
25. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
26. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

27. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை? 8-தமிழ்
28. மண்பாண்டகம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.
29. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?
30. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
31. மக்கள் ஊரை விட்டு வெளியேறக் காரணம் என்ன?
32. பகத்சிங் கண்ட கனவு யாது?

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி 4 x 2 = 8

33. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
34. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
35. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
36. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. சந்திப்பிழை என்றால் என்ன?
38. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3 x 4 = 12

39. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.
40. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.
41. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
42. உழவுத் தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?
43. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
44. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர்.ஆற்றிய பணிகள் யாவை?

அடிபிறழாமல் எழுதுக. 4+4+2=10

45. அ) 'வாழ்க நிரந்தரம்' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து.
    ஆ) 'கற்றோர்க்குக் கல்வி' எனத் தொடங்கும் குமரகுருபரர் பாடல்
    இ) 'தக்கார்' எனத் தொடங்கும் குறள்.

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 2 = 10

46. தொடரில் உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.
    திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது
47. உணர்ச்சித் தொடராக மாற்றுக.
    'காடு மிகவும் அழகானது'
48. உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
    'குன்றின் மேலிட்ட விளக்கைப் போல'
49. சரியான இணைச்சொல்லை இட்டு நிரப்புக.
    சான்றோர் எனப்படுபவர் ............ களில் சிறந்தவர் ஆவர்.
    (கல்விகேள்வி, போற்றிப்புகழப்பட)
50. கலைச்சொல் எழுதுக.
    அ) Auditor ஆ) Equestrian

விரிவான விடையளி 3 x 8 = 24

51. அ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

    ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
52. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

    ஆ) அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.
53. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
    நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
    முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை

(அல்லது)

    ஆ) கட்டுரை எழுதுக. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

www.Padasalai.Net
CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com